Academic Research News
Peer-Reviewed Journal



Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

# Kumarikku Adaikalamai Vanthal Meenakshi

**Dr. A. P. Ramalekshmi,** Assistant Professor of Tamil, Tamil Research Centre,
S.T. Hindu College, Nagercoil - 629003, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-5093-6577
**DOI: 10.5281/zenodo.11192243**

## Abstract

*Kanyakumari is about 16 km from Nagerkoil. Kandan Shasta Temple is an ancient guardian deity in the town of Aralvaimozhi located in the Thovalai district. In the 13th century AD, when Alauddin Khilji's army under the command of Malikapur captured Madurai from the Pandyas. Historical evidence says that the Meenakshi statue was preserved in the Barakodi Kandan Shasta temple in Aralvaimozhi for 59 years. It was the family deity of the Venadu kings. Barakodi Kandan Shasta Temple is the place where the Meenakshi statue was preserved. Ever since this event took place, the auspicious Meenakshi Sundareswarar Temple has been revered. The 'Thirukalyana Festival' is celebrated for four days in the month of Chitrai as the festival of sending Madurai Meenakshi from the Chera country to the Pandya country. The festival and ceremonies related to the historical events are held in the Thirukalyana Mandapam of the temple. It is believed that Ambal was taken to the Vinayagar temple the day before and Goddess Meenakshi who bathed in the nearby Akaligai spring, was brought by Madurai Sundareswarar. The bridegroom's family members, bring Meenakshi to the holy stage of this temple and marry Meenakshi by giving new clothes and ornaments along with a drum. Thus, the ceremonious rituals go on in the temple according to the sources. Hence, this article investigates the sources to bring the original facts to the Tamil society.*

**Keywords:** Kumari, Saviour, Madurai, Meenakshi.

## References

[1] T.V. Sadasiva Bandarathar. *Pandyan History*. South Indian Shaivaism Literature Society, Chennai – 1. 1977.
[2] Vithuvan S. Sathasivam. *Cheranadum Senthamilum*. Sashi Nilayam, Nagercoil, 1969.
[3] Prof. A.K. Perumal. *Thirukoil Vazhikatti Kanyakumari District.* Department of Hindu Religious Charities, Government of Tamil Nadu, June 2015.
[4] V. Kandaswamy. *Tamilnattin Thalavaralarum Panpattu Chinnangalm*. Palaniappa Brothers Publishing House, 1983.
[5] *Deepam Magazine*. *Maduraikum Nerupukkum Undana Thodarbu*. www.kalkionline.com Accessed on March 5, 2023.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

# குமரிக்கு அடைக்கலமாய் வந்தாள் மீனாட்சி

**முனைவர் ஆ. பா. இராமலெட்சுமி**, உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம், தென்திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.
ORCiD: https://orcid.org/0000-0001-5093-6577
DOI: 10.5281/zenodo.11192243

**ஆய்வுச் சுருக்கம்**

*கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலிருந்து சுமார் 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தோவாளை வட்டத்தை சார்ந்த ஆரல்வாய்மொழி என்னும் ஊரிலுள்ள பழமையான காவல் தெய்வமான கண்டன் சாஸ்தா ஆலயத்தில் கி.பி.13ஆம் நூற்றாண்டில் ஆலாவுதீன் கில்ஜியின் படைதளபதியான மாலிக்கபூர் படையானது பாண்டியர்களிடமிருந்து மதுரையை கைபற்றியது. அப்போது மதுரை மீனாட்சியின் விக்ரகத்தைக் காப்பாற்ற மதுரைக்கு முன்னடியில் இருந்த ஆரல்வாய்மொழி என்னும் ஊரில் உள்ள பரக்கோடி கண்டன் சாஸ்தா ஆலயத்தில் இச்சிலையைப் பாதுகாத்ததாகவும் 59 ஆண்டுகள் வேணாட்டு மன்னர்களுக்கு குலத்தெய்வமாகவும், இம்மண்ணே பிறந்த ஊராகவும், விஜயநகர நாயக்கர் ஆட்சிக்காலத்தில் மீண்டும் அச்சிலையை மதுரைக்கு திருமண வைபோகத்துடன் மதுரை சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு வேணாட்டு அரசர்கள் அனுப்பியதாகவும் தலவரலாறு கூறுகிறது. மீனாட்சி அடைக்கலமாக வந்த இடமே பரக்கோடி கண்டன் சாஸ்தா ஆலயம் ஆகும். இந்நிகழ்வு நடந்த பின்னாளில் இருந்து அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயமாக போற்றப்படுகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** குமரி, மீட்பர், மதுரை, மீனாட்சி.

**முன்னுரை**

இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள மிக தொன்மையான பகுதியே குமரியாகும். சிவபெருமானை திருமண செய்ய தவக்கோலத்தில் கன்னியாய், குமரியாய் ஆதிசக்தியான இத்தாய் தெய்வத்தின் பெயரலேயே “கன்னியாகுமரி” என்று வழங்கப்படுகிறது. தமிழகத்தில் 32 மாவட்டங்களில் ஒன்றாக விளங்குகிறது. வைணவ ஆழ்வார்களால் மங்களாசனம் செய்யப்பெற்ற திருவெண்பரிசாரம், திருவட்டாறு என இரண்டு புகழ்பெற்ற திவ்யதேசங்களும், பன்னிரண்டு சிவலாய ஒட்டங்களை கொண்ட சிவ ஆலயங்களும், ஆயிரங்கண்ணோனின் சாபத்தைப் போக்கிய சுசீந்திரம், திருவிதாங்கூர் மன்னர்கள் ஆண்ட அரண்மனைகள், கொட்டாரங்கள், பாசரைகளான உதயகிரி கோட்டை, வட்டக்கோட்டை, ஒளவையார் அம்மன் கோவில், நாஞ்சில் மக்களின் உணவு, பழக்கவழக்கம் பண்பாடு, பாரம்பரியம், வீரம் என பல சிறப்புகளைக் கொண்டது. மேலும் வேளிமலை, பொதிகைமலை,

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணை, மாம்பழத்தாறு அணை, பழையாறு, கோதையாறு என இயற்கைவளமும், நீர்வளமும் கொண்ட பகுதியாக இப்பகுதி அமைந்துள்ளது.

**குமரியின் வரலாறு**

கன்னியாகுமரி மாவட்டம் 1947 வரை திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழ் இருந்ததாகவும், பின்னர் கொச்சின் ஆளுகைக்கு உட்பட்டிருந்து 1956 நவம்பர் 1ஆம் நாள் தமிழ்நாட்டுடன் இணைந்தது. குமரி மாவட்டத்தின் தலைநகரம் நாகர்கோவில் ஆகும். இதன் பழமையான பெயர் ‘கோட்டாறு’ ஆகும். கி.பி. 2ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியை ஆய்மன்னன் ஆண்டதாகவும் இப்பகுதியே “வேணாடு” என்று வழங்கப்பட்டதையும் அறியமுடிகிறது. இவ்வேணாடு சேரநாட்டில் அமைந்திருந்த பதினெட்டு நாடுகளில் ஒன்றாகும். பாண்டிய நாட்டின் தென்பகுதியில் ஆய்நாடு, வேய்நாடு என்ற இருப்பகுதியினை சிற்றரசுகள் ஆட்சி செய்ததையும், கி.பி.2ஆம் நூற்றாண்டில் குமரியின் பெரும்பகுதியான ‘ஆய்’ என்ற குடியுனர் அல்லது ஆய்க்குலத்தினர் ‘ஆய்க்குடி’ என்ற பகுதியே தலைநகரமாக கொண்டு ஆட்சிப்புரிந்ததையும் வரலாற்று நூலான “தென்குமரியின் சரித்திரம்” (பக்.142) பேரா. அ.கா.பெருமாள் அவர்கள் நூல்வழி அறியமுடிந்தது. தற்போது “இடலாய்குடி” என்ற ஊர் உள்ளது. வேணாடு தற்போது தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் கேரளமாநிலத்தின் கொல்லம் திருவனந்தபுரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது ஆகும்.

ஆய் நாடும் வேணாடும் இணைந்த பிறகு ‘ஆய்வேளிர்’ என்று அழைத்தனர். இவர்கள் பாண்டிய அரசின் கீழ்பட்ட பகுதியை ஆட்சி செய்தாகவும் “வேளிர் நாடு” என வழங்கப்பட்டதையும் வித்துவான் சதாசிவன் அவர்களின் சேரநாடும் செந்தமிழும் எடுத்துக்கூறுகிறது. 1956 தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு பகுதிகளும் ஒன்றிணைக்கப்பட்டு நாகர்கோவிலை தலைமையிடமாக கொண்டு தமிழ்நாட்டுடன் கன்னியாகுமரி என்ற புதிய மாவட்டம் உருவானது. நாஞ்சில் நாடானது 17ஆம் நூற்றாண்டு வரை வேணாடாகவும் அதற்கு அடுத்து திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உட்பட்ட பகுதியாகவும் தற்போது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்டபகுதியாகவும் திகழ்கிறது.

**பாண்டியர்கள் பெயர்பெற்ற ஊர்கள்**

நாஞ்சில் வள்ளுவன் பாண்டியர்களுக்கு படைத்தளபதியாக இருந்தான். பாண்டியர்களை “குமரி சேர்ப்பான்” என்று அழைத்தனர். நாஞ்சில் நாட்டில் இவர்கள் கைப்பற்றிய சிலபகுதிகளுக்கு தங்களின் பெயரை அவ்வூர்களுக்கு வைத்ததையும் அறியமுடிகிறது. இந்திரனின் பாவத்தை நீக்கிய புனித தலமான சுசீந்திரத்தை “சுந்தர பாண்டிய சதிர்வேத மங்கலம்” என அழைத்ததை தொல்லியல் ஆய்வேடு விளக்குகிறது.

ஆய் மன்னன் ஆண்ட அதியனூர், பாண்டியர்கள் வெற்றிப் பெற்ற பின்பு அதியனூர் அழகிய பாண்டியபுரம் என்று அழைத்ததையும் வரலாற்று செய்திகள் மூலம் அறியமுடிகிறது. பூதப்பாண்டியன் என்ற மன்னன் ஆட்சி செய்த இடம் பூதப்பாண்டி எனவும் வழங்கப்படுகிறது.

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

முதன்முதலாக கொள்ளையடித்தவனும் ஆட்சி செய்தவனுமாகிய செழியன் வேந்தன் கைப்பற்றிய பகுதியை சேந்தன்புதூர் என்று வழங்கியதை அறியமுடிந்தது. கன்னியாகுமரி மாவட்டத்தை கி.பி.2ஆம் நூற்றாண்டிலிருந்து, 9ஆம் நூற்றாண்டு வரை ஆய்மன்னர்கள் ஆட்சி செய்ததாகவும், 7ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர்கள் குமரிமாவட்டத்தின் தென்பகுதியினை ஆண்டதாகவும், இவர்கள் வசம் இப்பகுதி சிலகாலம் இருந்ததற்கு, ஆதாரமாக அவர்கள் கையாண்ட அல்லது வெற்றி பெற்ற பகுதிகளுக்கு தங்கள் பெயரை ஆக்கிக் கொண்டதை டாக்டர் கே.கே.பிள்ளையின் தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் எடுத்துக்காட்டுகிறது. மேலும், கி.பி.1311-ல் மதுரையை ஆட்சி செய்து வந்த மாலிக்கப்பூரின் படைகள் நாஞ்சில் நாட்டின் பல பகுதியை சேதமடைய செய்ததை, “திருப்பதிசாரம் திருவாழ்மார்பன் கோவில் - ஓர் ஆய்வு” (கன்னியாகுமரி மாவட்டம்) என்ற முனைவர் பட்ட ஆய்வேட்டில் பேராசிரியர். ஆ.பா. இராமலெட்சுமி (2013, ப.60) விளக்குகிறார். நாயக்கரின் படை கி.பி.1675ல் நாஞ்சில் நாட்டின் பல பகுதிகளான திருவெண்பரிசாரம், தெரிசனங்கோப்பு, சுசீந்திரம், ஆரல்வாய்மொழி, இன்னும் ஏராளமான பகுதிகளின் கோவில்களையும் விளைநிலங்களையும் கொள்ளையடித்தனர், சேதமடைய செய்தனர். மீண்டும் திருவிதாங்கூர் ஆட்சிக்காலத்தில் புதுபிக்கப்பட்டது.

**நாஞ்சில் நாடு**

வேணாட்டின் ஒரு பகுதியே ‘நாஞ்சில்நாடு’ ஆகும். நீர்வளமும் நிலவளமும் மிகுந்த செழிப்பின் அடையாளமாக விளங்கியது. இச்செல்வ செழிப்பே அன்னியர்கள் படையெடுக்கவும், விளைநிலங்களை சேதமடைய செய்து கொள்ளையடித்தனர். நாஞ்சில் வள்ளுவன் என்ற குறுநில மன்னன் இப்பகுதியை ஆண்டதால் “நாஞ்சில் நாடு” என பெயர் பெற்றதாக அறியமுடிகிறது. பழமையான நூலான சங்க இலக்கியத்தில் இம்மன்னனைப் புகழ்ந்து ஔவையார், கருவூர் காதப்பிள்ளை, மருதனின் நாயினார் ஆகியோர் ‘பொருநன்’ என அழைக்க பெற்றதையும் அறியமுடிகிறது.

**மணி யன்ன நீர் கடற் படரும்;**

**செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந! (புறம்., பா. 137)**

**உயர்சிமைய உழாஅ நாஞ்சில் பொருந! (புறம்., பா. 139)**

என்ற புறநானூற்று வரிகள் எடுத்துக்காட்டுகிறது.

**நாஞ்சில் நாட்டில் ஆரல்வாய்மொழி**

மதுரை மீனாட்சிக்கு அடைக்கலம் தந்த மலைத்தொடரான நாஞ்சில் நாட்டின் ஒரு பகுதி ஆரல்வாய்மொழி. மூவேந்தர்கள் தமிழ்நாட்டை ஆண்ட போது பாண்டிய நாட்டின் முன்னடியுமாய், சேரநாட்டின் முற்றுமாய் அமைந்த சிறப்புமிக்க பகுதியாகும். இரு நாடுகளுக்கிடையே அமைந்த மலைகளை கோபுர வாயிலாக அமைந்திருந்தது. பாண்டிய நாட்டுக்கு சேர நாட்டிலிருந்து செல்வோர் எந்தவித வரியும் கட்டாமல் பாதையை கடந்துச் செல்லலாம். ஆனால் பாண்டிய நாட்டிலிருந்து சேரநாட்டிற்குள் வருவோர்களில் சேரன்

அல்லாதோர் நுழைவு வரி கட்டிய பிறகே சேரநாட்டிற்குள் அனுமதிக்கப்பட்டனர். இப்படி வரக்கூடிய மக்களின் சேரர்களை கண்டறிய எல்லை காப்பாளர் அவர்களுக்கு "வாய்மொழி தேர்வு" நடத்தியதாக அறியமுடிகிறது. அத்தேர்வானது யாதெனில் "ஒரு ஆளாக்கு நெல்லுக்கு ஏழு வாழைப்பழம்" என்ற சொற்றொடரைச் சொல்ல வேண்டும். ல, ள, ழகர ஒலி வேறுபாடுகளைக் கொண்டு அவர்கள் சேரனா அல்லது வேற்றுப்பகுதியை சார்ந்தவர்களா என்பதை அறிவார்களாம்.

**மாலிக்கபூரின் படையெடுப்பு**

ரவிவர்ம குலசேகர பெருமாள் ஆட்சி செய்த காலத்தில், மதுரையை ஆண்ட மாறவர்ம குலசேகர பெருமாளின் மகளான சுந்தரவல்லியைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு பிறந்த நால்வரும் (அனந்தவர்மன், அச்சுதவர்மன், பிரபாவர்மன், கிருஷ்ணவர்மன்) பாண்டியனின் குலப்பெருமையிலேயே வளர்ந்தனர். மேலும் மாறவர்ம குலசேகரபெருமாளின் மகன்களாகிய சுந்தர பாண்டியன் மற்றும் வீர பாண்டியன் ஒற்றுமையில்லாத காரணத்தால் மாலிக்கபூர் படையானது மதுரையைக் கைபற்றியது. மேலும், திருநெல்வேலி மாவட்டம் களக்காட்டில் இவர்களுக்கென தனி நிலங்களைப் பிரித்து குறுநில மன்னர்களாக ஆட்சி செய்த போதும் ஒற்றுமையில்லாததால் சேரமன்னர்கள் பாண்டியர்களைக் கைபற்றியதாக அறியப்படுகிறது. வேணாட்டு அரசன் இரவிவர்ம குலசேகர பாண்டியன் அவரது மருமகன் வீரமார்த்தாண்டவர்மாவை ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நாளும் பங்குனி மாத உத்திர நட்சத்திரத்தில் தாய் மீனாட்சி இத்தலத்திற்கு வந்ததாக அறியமுடிகிறது. இக்கோவிலில் நடைபெறும் பங்குனி திருவிழா உத்திர நட்சத்திரத்தன்றே நடைபெறுகிறது.

**அடைக்கலமாய் வந்த ஆலயம்**

500 ஆண்டுகளுக்கு மேல் பழமையான ஆலயம் ஆகும். பரவன் என்ற வேட்டுவ இனத்தவர்கள் ஆரல்வாய்மொழி மலைப்பகுதிகளிலுள்ள முயல்களை வேட்டையாடியதாகவும், அப்போது வேடுவனின் வில்லுக்கு அகப்பட்டு வீழ்ந்த முயலை எடுக்கும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட தெய்வச்சிலையே மூலவரான 'சாஸ்தா' ஆகும். பல ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பழமையான தெய்வமாகவும் இங்குள்ள 'பரக்கோடி கண்டன் சாஸ்தா' விளங்கியதாகவும் இங்குள்ள அனைத்து மக்களால் வழிப்படும் தெய்வமாகவும், சேர மன்னர்களின் கட்டுப்பாட்டுக்குள் சிறப்பாக செயல்பட்டதாகவும் தலவரலாறு கூறுகிறது. சுமார் 59 ஆண்டுகளுக்கு மேல் இப்பகுதியை ஆட்சி செய்த குமரித் தெய்வமாக, வேணாட்டு அரசர்களின் குலத்தெய்வமாக விளங்கியதையும் அறியமுடிகிறது. கொல்லம் 486ல் மீனாட்சி அம்மன் நாஞ்சில் நாட்டின் ஒரு பகுதியான ஆரல்வாய்மொழியில் உள்ள பரக்கோடி கண்டன் சாஸ்தா ஆலயத்திற்கு வந்ததை எழுத்தாளர் ஜெயமோகன் "குமரி துறவி" நூலில் எடுத்துக்காட்டுகிறார். கி.பி.1307ல் மாலிக்காபூரின் படையெடுப்பானது மதுரைக் கோவிலை தரமட்டமாக ஆக்கியதையும் சிலப்பகுதிகள் தீயிட்டு சேதமாக்கிய போது தாய் தெய்வமான மீனாட்சி பாதுகாக்கும் பொருட்டு பாண்டியநாட்டின் முன்னடியில் இருந்த இவ்வாலயத்தில்

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

பாதுகாத்ததை தலவரலாறு எடுத்துக்காட்டுகிறது. முகலாயர்களை வீழ்த்தி மதுரையை மீட்ட விஜயநகர நாயக்க பேரரசு ஆட்சி செய்த காலத்தில் அம்மன்னன் குமார கம்பண்ணன் நாயக்கரின் மனைவியான கங்கம்மா தேவியின் கனவில் தெய்வ பெண் கிளியுடன் வந்ததால் நாயக்க மன்னன் ஆரல்வாய்மொழியில் இரகசியமாய் பாதுகாத்து வந்த மதுரை மீனாட்சியை, மீண்டும் மதுரைக்கு கொண்டு வர ஆணையிட்டதன் பெயரில், சித்திரை மாதம் திருக்கல்யாண கோலத்தில் மணமகன் வீடான மதுரை சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு வேணாட்டு அரசன் தலைமையில் குமரியிலிருந்து மதுரைக்கு அனுப்பி வைத்ததாக தலவரலாறு கூறுகிறது.

**மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம்**

சேர நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்கு மதுரை மீனாட்சியை அனுப்பிய விழாவாக ‘திருக்கல்யாண விழா’ சித்திரை மாதம் நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது. கோவிலிலுள்ள திருக்கல்யாண மண்டபத்தில் வைத்து நடத்தப்படுகிறது. அம்பாள் முந்தைய நாள் தபசு காட்சிக் கோலத்தில் மேல்நின்ற விநாயகர் ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அதனருகே உள்ள அகலிகை ஊற்றில் நீராடிய தாயார் மீனாட்சிக்கு, மாப்பிள்ளை வீட்டார் ஆகிய மதுரை சுந்தரேஸ்வரர் மேளத்தாளத்துடன் ஆடை ஆபரணங்களுடன் பல சீர் வரிசைகளைக் கொடுத்து மீனாட்சியை அழைத்து வருவதாகவும், திருமணம் செய்வதாகவும் ஐதீகம். கோவில் நுழைந்த அம்பாள் திருக்கல்யாண மண்டபத்தில் வைத்து திருக்கல்யாணம் நடைபெறுவதற்கு முன் அம்பாளுக்கு ‘கதிர்குளித்தல்’ (மஞ்சள் நீரில் நீராட்டுதல்) நிகழ்ச்சி நடைபெறுகிறது. மீண்டும் மணப்பெண் கோலத்தில் பெண் வீட்டாரின் நகையையும், மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த அணிகலன்களை அணிந்து வந்த தேவியை சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் வைபவம் செய்வது ஐதீகம். வேணாட்டிற்கு அடைகலமாக வந்த மதுரை மீனாட்சியை, அவளது சொந்த ஊரான மதுரைக்கு அனுப்பும் விழாவாக பரக்கோடி கண்டன் சாஸ்தா ஆலயத்தில் “மீனாட்சி சுந்தரஸ்வரர் திருக்கல்யாணம்” இன்றளவும் சித்திரை மாதம் மதுரையில் நடப்பது போன்றும் இவ்வாலயத்தில் நடைபெறுகிறது என்பது பலரும் அறியாத வரலாற்று உண்மை.

**முடிவுரை**

மதுரை மீனாட்சிக்கு அடைக்கலம் தந்த கன்னியாகுமரி மாவட்டதிலுள்ள நாஞ்சில் நாட்டின் ஒரு பகுதியே ஆரல்வாய்மொழியாகும். பழமையான பரகோடி கண்டன் சாஸ்தா ஆலயத்தில் வைத்து பாதுகாத்த மீனாட்சி அன்று முதல் வேணாட்டு மன்னர்களுக்கும் குலத்தெய்வமாக விளங்கினாள். வேணாடு பிறந்த வீடாகவும் அவ்வாட்சியின் தலைமையில் 59 ஆண்டுகள் இம்மண்ணின் வாழ்ந்த மீனாட்சியை மதுரை சுந்தரேஸ்வரருக்கு திருமணம் செய்து கொடுக்கும் விழாவாக சித்திரை மாதம் வெகுவிமர்சையாக கொண்டாடப்படுகிறது. மீனாட்சிக்கு காவலாக இருந்த சாஸ்தாவுக்கு, அடைக்கலமாக வந்த மதுரை மீனாட்சிக்கும் வரலாறு உண்டு என்பதை நிரூபிக்கும் வகையில் இவ்வாலயம் திகழ்கிறது.

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

**துணைநூற்பட்டியல்**

[1] T.V. சதாசிவ பண்டராத்தார். *பாண்டியன் வரலாறு*. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை - 1, 1977.

[2] வித்துவான் செ.சதாசிவம். *சேரநாடும் செந்தமிழும்*. சசி நிலையம், நாகர்கோவில், 1969.

[3] பேரா. அ.கா. பெருமாள். *திருக்கோயில்கள் வழிகாட்டி*. கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையதுறை, ஜுன் 2015.

[4] வி. கந்தசாமி. *தமிழ்நாட்டின் தலவரலாறுகளும். பண்பாட்டுச் சின்னங்களும்*. பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகம், 1983.

[5] *தீபம் இதழ்* "*மதுரைக்கும் நெருப்புக்கும் உண்டான தொடர்பு*." www.kalkionline.com மார்ச் 5, 2023.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.